# ‘சைக்கிள்’ சின்னத்தில் புதிய கூட்டணி!

## கஜேந்திரகுமார் தலைமையில் பேச்சுக்கள் நடக்கின்றன என்று கஜேந்திரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 12

“எங்கள்கட்சியின்தலைவர்கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் பல தரப்பினரும் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர். அந்தப் பேச்சுகளில் ஒரு முன்னேற்றம் ஏற்படும் என்கின்ற நம்பிக்கை இருக்கின்றது. அதற்கமைய ஒரு புதிய கூட்டு அமைந்தாலும் எங்களுடைய ‘சைக்கிள்’ சின்னத்தில்தான் வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.” - என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்கான கட்டுப் பணத்தை யாழ். தேர்தல் திணைக்களத்தில் இன்று செலுத்திய பின்னர் ஊடகங் களுக்குக் கருத்து வெளி யிடும்போதே அவர் 2▶

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 28 செவ்வாய்க்கிழமை 12.03.2025 கதிர் 151




### பெண் வைத்தியர் மீதான பாலியல் வன்கொடுமை:

# முன்னாள் இராணுவச் சிப்பாய் இன்று காலை மடக்கிப் பிடிப்பு!

கொழும்பு, மார்ச் 12

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் பெண் வைத்தியரைப் பாலியல் வன்கொடுமை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய முன்னாள் இராணுவச் சிப்பாய் இன்று காலை கல்னேவ பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரைக் கைது செய்வதற்காக 5 பொலிஸ் குழுக்கள் மற்றும் 45 விசேட அதிரடிப் படை அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

பெண் வைத்தியரைப் பலாத்காரம் செய்த பின்னர், சந்தேகநபர், மேற்படி பெண் வைத்தியரின் இரண்டு கைத்தொலைபேசிகளில் ஒன்றைத் திருடிக்கொண்டு தப்பிச் சென்றிருந்தார்.

பெண் வைத்தியரின் கைத்தொலைபேசி ஏதோ ஒருவகையில் இந்தச் சந்தேகநபரைக் கைது செய்வதற்குச் சான்றாக இருந்தது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் கல்னேவவில் மறைந்திருந்தபோது அவரைப் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படை அதிகாரிகள் குழுவினர் கைது செய்தனர்.

இதற்கு முன்னர் இந்தச் சந்தேகநபர் கெக்கிராவ பகுதியில் நடந்த 4 மில்லியன் ரூபா 2▶




## தேர்தலில் ஈ.பி.டி.பி. தனித்துப் போட்டியாம்




யாழ்ப்பாணம், மார்ச் 12

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் ஈ.பி.டி.பி. வீணைச் சின்னத்தில் தனித்திப் போட்டியிடவுள்ளது என்று அந்தக் கட்சியின் ஊடகச் செயலாளர் பன்னீர்செல்வம் ஸ்ரீகாந் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற வாராந்த ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர், மேலும் கூறுகையில்,

“ஈ.பி.டி.பி. தனது தனித்துவத்துடனேயே அனைத்து தேர்தல்களிலும் முகங்கொடுத்து வருகின்றது.

குறிப்பாக வடக்கின் ஐந்து மாவட்டங்கள், கிழக்கில் மூன்று மாவட்டங்கள் உள்ளடங்கலாக வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஈ.பி.டி.பி. தனது சின்னமான வீணைச் சின்னத்தில் தனித்துப் போட்டியிடவுள்ளது.

2▶

## வைத்தியசாலைகள் முடக்கம் நோயாளர்கள் பெரும் அவதி

### நாளை வரை பணிப்புறக்கணிப்புப் போர் தொடரும் என்கின்றனர் வைத்தியர்கள்



கொழும்பு, மார்ச் 12

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேவையாற்றும் பெண் வைத்தியர் ஒருவர், முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவரால் கத்தி முனையில் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று காலை 8 மணி மு 2▶

## யாழில் கஜேந்திரா வாள்களுடன் இளைஞர்கள் மூவர் சிக்கினார்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் வாள்கள் மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டனர்.

கொக்குவில் பகுதியில் கடந்த 3ஆம் திகதி இளைஞர் ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டில் அந்த இளைஞரின் 2▶



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## கஜேந்திரகுமார் தலைமையில் .....

மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் யாழ்ப்பாணம் மாவடடத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிடுவதற்கு இன்று கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான இந்தக் கட்சிக்கு எமது மக்கள் முழு ஆதரவை வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு தேர்தல் பணிகளை ஆரம்பித்திருக்கின்றோம்.

எங்களுடைய கட்சி இன்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கட்டுப்பணம் செலுத்தியிருந்தாலும் தொடர்ந்து வடக்கு, கிழக்கு முழுவதும் கட்டுப்பணம் செலுத்தி வேட்புமனுக்களையும் தாக்கல் செய்யவுள்ளது.

எங்கள் கட்சியின் தலைவருடன் பல தரப்பினரும் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர். இந்தப் பேச்சு முயற்சிகளில் எங்கள் நிலைப்பாட்டை நாங்கள் தெளிவாகக் கூறி வருகின்றோம்.

குறிப்பாக தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் 13 ஆவது திருத்தச் சட்டம் நிராகரிக்கப்பட வேண்டும், நல்லாட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட ஏக்கிய ராஜ்ஜிய என்ற ஒற்றையாட்சி வரைவு நிராகரிக்கப்பட வேண்டும், தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டம் ஆகியவற்றோடு உடன்படக் கூடிய தரப்புகளோடு ஒன்றிணைந்து பயணிக்கக் கூடியதான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

அந்தப் பேச்சுக்களில் ஒரு முன்னேற்றம் ஏற்படும் என்கின்ற நம்பிக்கை இருக்கின்றது. அந்தத் தரப்புக்களோடு முழுமையான ஓர் இணக்கம் ஏற்பட்ட பின்னர் யார், யார் என்ற அந்த விவரங்களை அறிவிப்போம்.

அவ்வாறு ஒரு புதிய கூட்டு அமைந்தாலும் எங்களுடைய சைக்கிள் சின்னத்தில்தான் வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், எம்முடன் இதுவரையில் பேசிய தரப்புக்கள் எமது இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டுள்ளனர். எனினும், பேச்சுக்கள் தொடர்வதால் முழு விவரங்களையும் இப்போதைக்கு எம்மால் கூற முடியாவிட்டாலும் விரைவில் இந்தக் கூட்டு தொடர்பில் கட்சியின் தலைவர் அறிவிப்பார்." - என்றார்.

## முன்னாள் இராணுவச்......

மதிப்புள்ள தங்க நகைகள் திருடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வழக்கு ஒன்று தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மேற்படி சந்தேகநபர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முற்பகலே விடுவிக்கப்பட்டிருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சந்தேகநபர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளின் பட்டியலில் உள்ளாரா என்பது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் வைத்தியராகப் பணிபுரியும் 32 வயதான பெண்ணே இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் ஆவார்.

மேற்படி பெண் வைத்தியர் நேற்றுமுன்தினம் மாலை வைத்தியர் விடுதியில் வைத்துப் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் கட்டுப்பணம் செலுத்திய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் போட்டுயிடுவதற்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

யாழ். மாவட்டத்தின் 17 சபைகளிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் 'சைக்கிள்' சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

இதற்கான கட்டுப்பணத்தைக் கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன், யாழ். தேர்தல் திணைக்களத்தில் இன்று காலை செலுத்தினார்.

இதேபோன்று வடக்கு, கிழக்கு முழுவதும் சைக்கிள் சின்னத்தில் தமது கட்சி போட்டியிடவுள்ளது எனவும், அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் கஜேந்திரன் தெரிவித்தார்.



## யாழில் கஜேந்திரா......

கைவிரல் துண்டாடப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வந்த பொலிஸார்இ மூன்று இளைஞர்களை நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்

மேற்படி மூவரிடமும் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர்களிடம் இருந்து ஹெரோயின் போதைப்பொருள்இ மூன்று கஜேந்திரா வாள்கள் உள்ளிட்ட ஏழு வாள்கள்இ இரண்டு அதிநவீன மோட்டார் சைக்கிள்கள் என்பனவற்றைப் பொலிஸார் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் யாழ். பொலிஸ் நிலையத்தில்தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தேர்தலில் ஈ.பி.டி.பி......

அதனடிப்படையில் இந்தத் தேர்தலில் எமது மக்கள் எமது கட்சிக்கு அணிதிரண்டு வாக்களித்து எம்மை வெற்றி பெறச் செய்வார்கள் என நம்புகின்றேன்." - என்றார்.

## வைத்தியசாலைகள்......

24 மணி நேர நாடு தழுவிய பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் முன்னெடுத்து வருகின்றது.

இதனால் வைத்தியசாலைகளில் அவசர சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக நோயாளர்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர். வைத்தியசாலைகளுக்கு இன்று சிகிச்சைக்கு வந்த நோயாளர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இதேவேளை, அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் பெண் வைத்தியரைப் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் இன்று காலை கைது செய்யப்பட்ட போதிலும், நாடளாவிய ரீதியில் இன்று முன்னெடுக்கப்பட்டுள்ள பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் பணிப்புறக்கணிப்பு நாளை காலை 8 மணி வரை தொடரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பிவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# தேஷபந்து தென்னகோன் தாக்கல் செய்த ரிட் மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு!

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் தாக்கல் செய்த ரிட் மனு மீதான விசாரணையை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

மாத்தறை நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை இடைநிறுத்தி இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பிக்குமாறு, முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் சட்டத்தரணிகள் ஊடாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவுப் பிறப்பிக்கப்பட்டது.

நீதிபதிகள் முகமது லஃபர் மற்றும் சரத் திசாநாயக்க ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதையடுத்து எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

# தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கால அவகாசம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 12

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலின் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விரும்பும் அரச ஊழியர்களின் விண்ணப்பங்கள் மார்ச் 3 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் தபால்களில் ஏற்படக்கூடிய காலதாமதங்களையும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகளையும் கருத்தில் கொண்டு தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் காலம் எதிர்வரும் 17 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.




இந்தக் காலதாமதங்களைத் தவிர்ப்பதற்கு தபால்மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை ஒவ்வொரு மாவட்ட வாரியாக வேறு பிரித்து வெவ்வேறு கடித உறைகளில் மாவட்ட தேர்தல் அலுவலகத்துக்கு நேரில் சென்று ஒப்படைப்பது மிகவும் உகந்தது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்குத் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்துக்குப;(www.election.gov.lk) பிரவேசிக்கவும்.

# பாடசாலை விடுமுறை தொடர்பில் கல்வி அமைச்சின் அறிவிப்பு!

2025 ஆம் ஆண்டுக்கான அனைத்து அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைளுக்கான விடுமுறை தொடர்பில் கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதற்கமைய, முதலாம் தவணைக்கான பாடசாலை கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 14 ஆம் திகதியுடன் நிறைவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், முதலாம் தவணைக்கான இரண்டாம் கட்ட பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் ஏப்ரல் 1ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மண்டியிட வைத்து தாக்கிய தனியார் வகுப்பு நடாத்தும் ஆசிரியருக்கு வெளிநாட்டு பயணத் தடை!

கொழும்பு, நுகேகொடை மற்றும் கம்பஹா பகுதிகளில் தனியார் வகுப்புகளை நடத்தும் ஆசிரியர் ஒருவர், தனது வகுப்புகளுக்கு வரும் மாணவர்களை அழைத்து அவர்களை கட்டாயப்படுத்தி மண்டியிட வைத்து தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்ட தனியார் வகுப்பின் ஆசிரியருக்கு வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆசிரியர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளுக்காக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு வருகைதருமாறு சம்பந்தப்பட்ட ஆசிரியருக்கு நேற்று (11) அழைப்பு விடுத்த போதிலும், அவர் வருகைத்தரவில்லை என தெரியவந்துள்ளது.

அதன்படி இது தொடர்பாக நீதிமன்றத்திற்கு அறிவித்த பின்னர், சந்தேக நபருக்கு எதிராக வெளிநாட்டு பயணத்தடையைப் பெறுவதற்கு சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக பலர் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையிடம் முறைப்பாடு அளித்துள்ளதாகவும், அதன்படி சந்தேக நபர் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது.



# மிதி வெடி

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு நாள் குறிச்சாச்சு… ஆளாளுக்குள்ள அடி - தடியும், குத்துவெட்டு, குழிபறிப்புக்கும் இனிப் பஞ்சமிருக்காது பாருங்கோ.. வேடிக்கை பாக்கிற எங்களுக்கு இனிக் கறி விருந்து சாப்பிட்ட போல தான்…

எங்கட இனத்தின்ர ஒற்றுமையைச் சந்தி சிரிக்க வைக்குமாப் போல பிரிஞ்சு நிக்கிற அத்தனை பேரும் இப்ப வேட்பாளர் தேடித் திரியனம்…. கண்டவன், நிண்டவன் எல்லாம்… “கௌரவ” உறுப்பினர் ஆகப் போட்டி போடப் போறாங்கள்…

ஆர், எவரெண்டு தெரியாத ஆக்கள் எல்லாம் தேர்தல் எண்டு வந்துட்டால் தேசியச் சாயம் பூச வெளிக்கிட்டிருவினம். நல்லூர் பின் பக்கம் கேப்பார் இல்லாமல் கிடக்கிற திலீபன் நினைவுத் தூபிக்கு அந்த நேரத்தில மட்டும் தான் “மவுசு”. கூட்டித் துடைச்சுத் துப்புரவாக்கித் தேர்தல் பணிகள் தொடங்கும்.

இவ்வளவும் ஏன், முள்ளிவாய்க்காலில கொத்துக் கொத்தாக் கொன்று போடேக்க லண்டனில நிண்டு “பி.பி.சி”ல செய்தி அறிஞ்சவையெல்லாம், இங்க நேரில நிண்டு “நீலிக்” கண்ணீர் வடிப்பினம்… “கிளிசரின்” பூசாமலே கண்ணில இருந்து தாரை, தாரையா தண்ணீர் கொட்டும். மே 18, செப்ரெம்பர் 12 முதல் 26, நவம்பர் 21 முதல் 27 இந்த நாளுகளுக்குள்ள “எலக்சன்” அறிவிச்சிருந்தால் எங்கட ஆக்கள் அப்பிடிப் “பெர்போஃம்” பண்ணியிருப்பினம்… இந்த முறை உள்ளூராட்சி இடையில வந்துட்டுது, என்ன செய்யுறதெண்டு யோசிப்பினம் எண்டு நினைக்கிறன்….

உருட்டுறவைக்கு என்ன கிடைச்சாலும் உருட்டுவினம் தானே? இந்த முறை பாவம் பூபதிக் கிளவி தான் கிடைச்சிருக்குது. இந்த மாசம் 19 ல இருந்து “ஏப்ரல்” 19 வரை அந்த மனிசிக்கு இந்த முறை நினைவேந்தல் சிறப்பா நடக்கும் பாருங்கோ… அவையள் மறந்திருந்தாலும் எண்டு தான் நான் நாளை நினைவுபடுத்துறன்.

சரி,அதை விடுங்கோ இன்னும் கொஞ்ச சுவாரஸ்யங்கள் இருக்குது…

“மாநகர சபையா இருந்தால் நான் தான் மேயர்”, “மாகாண சபையிலயும் எனக்கு இடம் தர வேணும்”, “நாடாளுமன்றத் தேர்தலிலயும் எனக்கு ரிக்கற் வேணும்” எண்டு கண்ட இடத்திலயும் கால் மிதிச்சு, சேராத இடமில்லை - கூடாத கூட்டமில்லை எண்டு சொல்லித் திரிஞ்சவர் இந்த முறை உள்ளூராட்சித் தேர்தலில போட்டியிடேல்லயாம்…….

என்ன? நம்பமுடியாமல் கிடக்குதே? எனக்கும் ஆரம்பத்தில நம்ப முடியாமல் தான் கிடந்தது…. “சும்மா விட்டுக் குடுக்க மாட்டான்….” அடிவாங்குவன் எண்டு தெரிஞ்சும் அதகடிப்பட்டு “மேயர்” பதவியை அடிச்சுப் பறிச்ச ஆள் எல்லோ…? எண்டு தான் நானும் நினைச்சனான்….

மற்றப்பக்கத்தால சு(ம்)மா வைச்ச பொறியில சிங்கம் மாட்டினதால தான் “இந்த முறை நான் கேக்கல” எண்டு சரணடைஞ்சிட்டாராம்…. கட்சியின்ர தொகுதிக்கிளைக் கூட்டம் போன கிழமை நடந்திருக்கு… அரசியலில பழம் தின்று விதை போட்ட முன்னாள் “எம்.பி”, கூட்டத்தில வைச்சு பக்காவாப் பந்தைத் தட்டி விட்டிருக்கிறார்….

“என்ன செய்யப் போறீங்க இந்த முறை? சாணக்கியமான கேள்வி, “முன்னாள்…..” இதைச் சற்றும் எதிர்பார்க்கேல்ல…. கட்சிக் காரருக்கு முன்னால என்ன செய்யுறதெண்டு தெரியாமல்… “நீங்கள் என்ன சொல்லுறீங்களோ அதன் படி நான் செய்யுறன்” எண்டிருக்கிறார்….

பழம் நழுவிப் பாலில விழுந்த மாதிரி முன்னாள் “எம்.பி”யின்ர கையில பந்து…. “நீங்கள் கேக்கிறது அவ்வளவு நல்லதா இருக்காது..” அப்பிடியே லாவகமாத் தட்டி விட்டார்… “கோல்” தான்… பிறகென்ன? “நான் இந்த முறை கேக்கல…” முடிஞ்சது முடிவாப் போயிற்று….

இப்பவும் சொல்லுறன் நான் உதை நம்பேல்ல…. பெரிசா ஏதோ “பிளான்” நடக்குது எண்டு தான் நான் நம்புறன்.

“பற்றிக்ஸ்” கல்லூரியில விளையாட்டுப் பழக்கின ஒருத்தரைப் பதவியில இருத்துறதுக்கு இப்பப் பக்கவாப் “பிளான்” பண்ணுகினமாம்… மலிஞ்சாச் சந்தைக்கு வரும் தானே? அடுத்த கிழமை பட்டியல் கையெழுத்துப் போடேக்க எல்லாம் தெரியவரும்…

தமிழரசு தனிச்சு நிக்கிறது எண்ட முடிவில திடமா இருக்குது. இவ்வளவு காலமும் தமிழரசோட சேர்ந்து நிண்டு “கூட்டமைப்பு” எண்டு கூத்தாடின கொலைகாரர்கள் பிரிஞ்சு போயிட்டினம் எண்டதில சனத்துக்கு ஒரு திருப்தி. என்னதான் சொன்னாலும், “தனித் தமிழ் தேசியம்” எண்டு சொல்லக்கூடிய ஒரே ஒரு கட்சி தமிழரசுக் கட்சி தானே?

காலத்தின்ர கட்டாயத்தால கண்டவையோடையும் கூட்டுச் சேர்ந்து கேட்டாலும், ஆயுதக் கலாசாரத்தில ஊறாத ஒரே கட்சி எண்டு பெயரெடுத்தவை… நேற்றையோட அந்தப் பேரும் போயிட்டுது பாருங்கோ….

உள்வீட்டுச் சண்டையால நாடாளுமன்றத் தேர்தலில நல்ல பாடம் படிச்சும் உவை திருந்தேல்ல பாருங்கோ… ஒரு காலத்தில அன்னிய ராணுவத்தோட சேர்ந்து ஆடினவையெல்லாம் கூட்டுக்குள்ள வந்திருந்தாலும் கட்சிக்குள்ள வராமல் இருந்தவை… இப்ப அப்பிடிக் கொத்தவைக்குக் கட்சியிலயும் உறுப்புரிமை குடுத்து “மெம்பர்” ஆக்கியிருக்கினமாம்….

தந்தை செல்வா சொன்னது சரியா இருந்தாலும், ஒரு சின்னத் திருத்தம்….. “தமிழர்களை இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேணும்” எண்டு அவர் சொன்னது, “தமிழரசை இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேணும்” எண்டு காலத்துக்கு ஏற்றமாதிரி கன கச்சிதமாப் பொருந்துதோ, இல்லையோ?

-நரசிம்மன்-



# கையூட்டல் பெற்ற சார்ஜன்ட் கைது!

கொழும்பு, மார்ச் 12

கையூட்டல் பெற்ற குற்றச்சாட்டில் ஹட்டன் பொலிஸ் நிலையத்தின் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அங்கொடை பகுதியைச் சேர்ந்த ஒருவர் வழங்கிய முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்த நிலையில், முறைப்பாட்டாளரையும் அவரது மனைவியையும் விடுவிப்பதற்கும், வழக்கை முடிவுக்குக் கொண்டுவர தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், சம்பந்தப்பட்ட சார்ஜன்ட் ஒரு தொகைப் பணத்தைக் கையூட்டலாக கோரியுள்ளார்.

மேற்படி சார்ஜன்ட் ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் வைத்து, கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# சம்பூர் சூரிய மின் உற்பத்தி நிலைய நிர்மாணப் பணி ஏப்ரலில் ஆரம்பம்

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 12

சம்பூர் சூரிய மின் உற்பத்தி நிலையத்துக்கான நிர்மாணப் பணிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி சம்பூர் நிலத்தடி சூரிய மின் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்க எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தருவார்.

இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய விஜயத்தின் போது விடுத்த அழைப்பின் பேரிலேயே இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.


அபிவிருத்தியின் அனைத்து நன்மைகளையும் அனுபவிக்கும் ஒரு வளமான சமூகத்தைக் கட்டியெழுப்புவதே தற்போதைய அரசின் அபிலாஷை என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கிராம அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு, சமூக வலுவூட்டல்கள் அமைச்சின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

மக்களின் பொருளாதாரம், சமூக மற்றும் கலாசார பாதுகாப்புக்காக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

பொருளாதார வலுவூட்டல் தேவைப்படுபவர்களுக்குக் கடன் வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் இதற்காக சமுர்த்தி நிதியத்திலிருந்து 55 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.



# பொகவந்தலாவையில் குடும்பஸ்தரின் சடலம்

பொகவந்தலாவை, லெச்சுமி தோட்டம், மத்திய பிரிவு, பத்தாம் இலக்க தேயிலை மலைக்கு அருகாமையில் உள்ள கால்வாயிலிருந்து நேற்று செவ்வாய்க்கிழமை இரவு குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஒரு பிள்ளையின் தந்தையான 57 வயதுடைய குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் ஆட்டுக்கு புல் அறுப்பதற்காக நேற்றுக் காலை வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ள நிலையில் இரவு நேரமாகியும் மீண்டும் வீடு திரும்பாமல் இருந்துள்ளார்.

இதனால் தோட்ட மக்கள் இணைந்து குடும்பஸ்தரைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில், கால்வாயில் சடலம் கிடப்பதைக் கண்டு பொகவந்தலாவை பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், சடலத்தை மீட்டு சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காகக் கிளங்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொகவந்தலாவைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வன்முறைக் கும்பலின் தலைவருக்குச் சிறை



*யாழ்ப்பாணம், மார்ச் 12*

*யாழ்ப்பாணத்தில் இயங்கிய பிரபல வன்முறைக் கும்பலின் தலைவர் எனக் கூறப்படும் நபருக்கு யாழ். நீதிவான் நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது.*

*யாழில் இயங்கிய வன்முறைக் கும்பல் ஒன்றின் தலைவர் எனக் கூறப்படும் நபரை, வன்முறைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் பொலிஸார் தேடி வந்த நிலையில், கடந்த 2022ஆம் ஆண்டு உரும்பிராய் பகுதியில் மறைந்திருக்கின்றார் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப் பெற்றது.*

*அந்தத்தகவலின் பிரகாரம் சம்பவ இடத்துக்குப் பொலிஸார் விரைந்தபோது, மேற்படி நபர் கூரிய ஆயுதங்களைக் காட்டிப் பொலிஸாரை அச்சுறுத்தி விட்டு தப்பிச் சென்றார்.*

*சம்பவம் தொடர்பில் பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த நிலையில், சிறிது காலத்தில் அந்த நபரைப் பொலிஸார் கைது செய்து மன்றில் முற்படுத்தி வழக்கு விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.*

*அந்நிலையில் குறித்த வழக்கு நேற்று தீர்ப்புக்காகத் திகதியிடப்பட்டிருந்த நிலையில், வழக்கு மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மேற்படி நபர் மீதான குற்றச்சாட்டில் ஒன்றுக்கு 3 மாத கால கட்டாய சிறைத்தண்டனை விதித்த மன்று, ஏனைய குற்றச்சாட்டுக்களுக்கு 2 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்து, அதனை 10 வருட காலத்துக்கு ஒத்திவைத்தது.*





# எது அழகு?

அழகு என்பது ஒவ்வொருவர் கண்ணோட்டத்திலும் வேறுபடும். ஒருவருக்கு மிக அழகாகத் தெரியும் ஒன்று, மற்றவருக்கு மிகச் சாதாரணமாகத் தெரியும். லைலாவின் அழகை மஜ்னுவின் கண்ணால்தானே காணமுடியும்?

ஆனால் நமது சமூகத்தில் அழகு என்பதன் வரையறையே வேறு. சிவந்த தோல் என்பதுதான் இங்கு அழகு. கறுப்பு நிறத்தை அபசகுனம் என்று ஒதுக்கித்தானே வைத்திருக்கிறோம்? இந்த வெள்ளை மனப்பான்மையுடன் இருக்கும் நாம்தான், ஆப்பிரிக்க-அமெரிக்க நிறவெறிக் கொள்கையை நரம்பு புடைக்க விமர்சிக்கிறோம். விளம்பரங்கள் கூட சிவப்பு நிறமுடைய பெண்கள் தான் தன்னம்பிக்கையுடன் திகழ்வார்கள் என்று கூவுகின்றன. அதை நம்பி சிவப்பழகு க்ரீம்களைத் தேய்த்து ஐந்து நிமிடங்களில் தன் நிறம் மாறி விட்டதா என்று இன்னும் கண்ணாடி பார்க்கும் பெண்கள் இருக்கிறார்கள்.

நம் நாட்டில் கறுப்பு நிறமுடைய பெண்கள் எத்தகைய சாதனைகள் செய்தாலும், அவை அவ்வளவு கொண்டாடப்படுவது இல்லை என்பதே கசப்பான உண்மை. கறுப்புப் பெண்கள் எதற்கும் ஆசைப்பட்டுவிடக் கூடாது. “இந்த மூஞ்சிக்கு எதுக்கு இது?..”, “இந்த கலரு உனக்கு செட் ஆகாது..”, “இந்த கலரா இருந்துட்டு.. இந்த ட்ரஸ் போட ஆசைப்படலாமா?..” இதுபோன்ற மோசமான விர்சனங்களை தான் அவர்கள் எதிர்கொள்ள நேர்கிறது.

திருமணத்திற்குப் பெண்பார்க்கும் நிகழ்வுகளில் கூட, பெண் நல்ல நிறமாக இருக்க வேண்டும் என்பதே முதல் காரணியாக வைக்கப்படுகிறது. கறுப்பே அழகு.. காந்தலே ருசி.. என்பது வெறும் ஏட்டுச் சுரைக்காயாகத்தான் இருக்கிறது. தனித்திறமைகள் ஏதுமில்லாமல் வெறும் சிவப்பு நிறத்தை மட்டும் வைத்து வாய்ப்பு கொடுக்கப்படும் பெண்கள், தங்களது நேரத்தை வீணடிப்பதோடு, திறமையுள்ள இன்னொருவரின் இடத்தையும் பறித்து அவர்களது முன்னேற்றத்தையும் தடுக்கிறார்கள்.

ஆனால் பெண்களுக்கு என்றிருக்கும் சிவப்பு நிற அளவுகோல் எதுவும் ஆண்களுக்கு இல்லை. “ஆம்பளை எப்படியிருந்தா என்ன?..”, “ஆம்பளைக்கு எதுக்கு அழகு?..” என்று சாதாரணமாகக் கடந்து போய்விடுகிறார்கள். நிறம் குறைவாக(?) இருக்கும் காரணத்தாலேயே நிறையப் பெண்கள் முதிர்கன்னிகளாக ஜன்னல் கம்பிகளோடு குடித்தனம் நடத்துகிறார்கள். குறைந்த சதவீதத்திலாவது இத்தகைய பெண்கள் இருக்கிறார்கள்.

பருமனான பெண்கள் படும்பாடு சொல்லி மாளாது. ஜோக்ஸ் (?), மீம்ஸ் என்று படுத்தி எடுக்கிறார்கள். ஒல்லியாக இருந்தால்தான் அழகு என்று நேரடியாகவும், மறைமுகமாகவும் நமது மூளையின் ஒரு மூலையில் திணித்துக் கொண்டே இருக்கிறார்கள். இங்கு அழகுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் ஆரோக்கியத்திற்குக் கொடுக்கப்படுவதில்லை. திரைப்படங்களில் கூட குண்டான பெண்கள் நகைச்சுவை என்ற பெயரில் அவமானப்படுத்தப்படுகிறார்கள். உடல் பருமனைக் காட்டி அவர்களுக்கு நல்ல உடைகள் மறுக்கப்படுகிறது. விரும்பிய உணவு விலக்கப்படுகிறது. கேலிப்பொருளாகவே அவர்கள் சமூகத்தில் பார்க்கப்படுகிறார்கள். அவர்களுக்கு இருக்கும் நல்ல எழுத்துத் திறமை, பேச்சாற்றல், ஓவியம் வரையும் திறன் போன்ற எண்ணற்ற விஷயங்கள், கவனிப்பாரின்றி முடக்கப்படுகின்றன.

என்னவோ குண்டானவர்கள் எல்லாம் தின்றே தீர்ப்பவர்கள் என்று ஒரு எண்ணம் பரவிக் கிடக்கிறது. அவர்களுக்கு உடல் ரீதியாக ஏதேனும் பிரச்சினைகள் இருக்கலாம் என்ற எண்ணம் ஏனோ யாருக்கும் வருவதில்லை. “வீட்ல எந்நேரமும் தின்னுட்டு தூங்குவா போல..” என்று எளிதாகக் கணித்து விடுகிறார்கள். “ஒரு வேலையும் பார்க்க மாட்டா போல..” என்று சுலபமாகச் சொல்லி விடுவார்கள். நிறைய பெண்கள் எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாலும், உணவைக் குறைத்தாலும், உடல்வாகால் எடைகுறையாமல் இருக்கிறார்கள்.

‘ஒல்லியானவர்களுக்கு நிறைய தன்னம்பிக்கை இருக்கும். அவர்களுக்கு அழகான காதலன் கிடைப்பான். அவர்கள் உடனே வேலை கிடைத்து ஸ்லோமோஷனில் ஒரு ஃபைலோடு நடந்து வருவார்கள்’- இப்படித்தான் ஊடகங்களில் வரும் விளம்பரங்கள் நமது மூளையைச் சலவை செய்து வைத்திருக்கின்றன. ஒரு காலத்தில் பெண்கள் கொஞ்சம் ‘பூசினாற்போல’ இருப்பது அழகென்று சொன்னார்கள். இன்றோ ‘சைஸ் ஜீரோ’ தான் அழகென்று சொல்லுகிறார்கள். எப்படி இருந்தாலும் ஆண்களுக்குப் ‘பிடித்த’ மாதிரித்தான் பெண்கள் தன்னை மாற்றிக் கொள்ள வற்புறுத்தப்படுகிறார்கள்.

பொதுவெளியில் மட்டுமல்ல, வீட்டிலும் கூடப் பருமனான பெண்கள் அவமானப்படுத்தப்படுகிறார்கள். மாற்றி மாற்றி எந்நேரமும் தனது உடலைப் பற்றிய சிந்தனையிலேயே ஒரு பெண் ஆழ்த்தப்படுகிறாள். ஒல்லியாக இருந்தால் கொஞ்சம் உடம்பு போட, குண்டாக இருந்தால் இளைக்க என்று அடுத்தவர்களின் இலவச அறிவுரைகள் ஏராளமாகக் கிடைக்கும். இதைப் பயன்படுத்தி உடம்பைக் குறைக்க வைக்கும் நிலையங்கள் பெருகி வருகின்றன.

ஆண் உடலைப் போன்றதல்ல பெண்ணின் உடல். அதை நமது விருப்பப்படி ஏற்றி இறக்க முடியாது. பிரசவம், மாதவிடாய் உள்ளிட்ட காரணங்களாலும், ஹோர்மோன் மாற்றங்களாலும் பெண்ணின் உடல் மாற்றங்களுக்கு உட்பட்டே தீரும்.

ஆனால் பிரசவத்தினால் வயிறு பெரிதான பெண்கள் இங்கு கொண்டாடப்படுவதில்லை. வெளிநாட்டுப் பெண்களோடு உடல்ரீதியாக ஒப்பிடப்பட்டு கிண்டலடிக்கப்படுகிறார்கள். அவர்களது உணவுப்பழக்கம் வேறு. நம்முடையது வேறு என்ற சின்ன விஷயம் கூட ஆண்களின் மூளையில் உறைப்பது இல்லை. அவர்களின் பார்வையில் ஒல்லியாக இருப்பவர்கள் தான் ‘அழகிகள்’ என்றால், அவர்களது பார்வையின் கோணம் எவ்வளவு தவறானது?

சிவந்த நிறம், வெளுத்த தோல், ஒல்லி உடம்பு.. இவையல்ல அழகு. இன்று நிறைய பேருக்கு கீழே உட்கார்ந்து சாப்பிட முடிவதில்லை. நாற்காலியில் உட்கார்ந்தே பழகிவிட்டதால், சிறிது நேரம் கீழே அமர முடிவதில்லை. கீழே அமர்ந்து, எழும்போது யார் துணையும் இன்றித் தானாகவே எழுவதுதான் ஆரோக்கியம். உடல் பருத்திருந்தாலும் நன்றாகக் குனிந்து நிமிர முடிந்தால், அதை விட அழகு எதுவுமில்லை. நோய்நொடி எதுவுமின்றி துறுதுறுவென்று இருப்பதுதான் பேரழகு.

உடல் பருமனைக் குறித்து யாரும் கிண்டல் செய்தால் சிறு புன்னகையுடன் அதை புறந்தள்ளுங்கள். அடுத்தவர் கண்களுக்கு அழகாகத் தெரிய வேண்டும் என்று எண்ணுவதை விடுத்து, நமக்கான தனித்திறமைகளை வளர்த்துக் கொள்வதில் கவனத்தைச் செலுத்துவோம்!



முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.03.2025 இல் வெளியிடப்பெற்றது.